
padippakam

# கதிர்

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1




உயிர்கள் - உலகம்

மொழி - சமயம்

பேரண்டம் [பிரபஞ்சம்]

படிப்பகம்

padippakam




# "லெமூர் உயிர் இனங்கள்"





படிப்பகம்

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund

பிரபஞ்சத்தின் தோற்றம், இருப்பு, முடிவு ஆகியன பற்றி பலவகையான கருத்துக்கள், கண்டு பிடிப்புகள் காலங் காலமாக உருவாகி வருகின்றன. ஆனால் அவைபற்றிய பூரண விளக்கங்களோ, கண்டுபிடிப்புகளோ அண்டசராசரங்களையும் (பிரபஞ்சம்) உள்ளடக்கியதாக இருக்கவில்லை. ஏன் எனில் அனைத்து கருத்துக்களும், கண்டு பிடிப்புக்களும் பூமி, பூமியில் வாழும் மனிதன், பூமியை சுற்றியுள் கிரகங்கள், கோளங்கள். என்கின்ற சூரிய குடும்பத்தை சுற்றியே வரையறைக்குள் உட்பட்டிருப்பதால்.

அண்ட வெளியில் சூரியன் வரையும் தாண்ட முடியாத மனிதனால் ஒரு போதும் அண்ட சராசரங்களைப் பற்றி அறிய முடியாது. அப்படி சூரியனை தாண்டி விட்டால் பூமியோ, நட்சத்திரங்களோ, கோளங்களோ அன்றி சூரியனையோ மீண்டும் காணவுமுடியாது, அறிய முடியாது. அப்படியான ஒரு நிலைதான் பிரபஞ்சம் என அழைக்கப்படுகிறது. இதனால்த் தான் பூமியில் உள்ள மனிதனுக்கு பிறப்பது தெரியும், இறப்பது தெரியாது என்னும் ஒரு நிலை வருகிறது. ஆனால் பூமியில் உள்ள ஒரு உயிர் அல்லது பிரபஞ்ச முடிவும் மீண்டும் இறப்பது அல்லது அதன் இயல்பான நிலைக்கு திரும்புதல் என்பது குறைந்த பட்சம் 5000 மில்லியன் வருடங்கள் எடுக்கின்றன. அதாவது 4600 மில்லியன் வருடங்களில் 'கதிர்' நிலையை அடைந்து தொடர்ந்து ஒரு மில்லியன் வருடங்களில் அண்டசராசரங்களில் இருந்த கதிர் வீசல் நிலை நீங்கி பிரபஞ்சநிலையை எய்துகிறது. மனிதனுக்கு ஏற்படும் மரணம் என்பது உண்மையான இறப்பாகாது. இம்மரணம் ஒவ்வொன்றும் பிரபஞ்சத்தை நோக்கிய படிமுறை வளர்ச்சியே.

padippakam

'கதிர்' என்ற நிலையே பிரபஞ்சத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் மிகவும் நெருக்கத்துடன் காணப்படும் ஒன்றாகும். இவ்வாரம்பத்திற்கும்-முடிவுக்கும் இடைப்பட்ட நிலையே கருத்துக்களும் - கண்டுபிடிப்புகளும். மனிதன் மரணமான பின்னர் என்ன ஆகிறான் என்பது இன்று எல்லோர் மத்தியிலும் வியாபித்து நிற்கின்றது. அத்துடன் மனிதனுக்கு பரிணாம வளர்ச்சி உண்டா? அப்படி பரிணாம வளர்ச்சி உண்டு என்றால் மரணம் என்பதன் அர்த்தம்தான் என்ன? மனிதனின் பரிணாம வளர்ச்சி எப்படி பட்டது? இந்த பூவுலகத்திலதானா? அன்றி ஆவியுலகத்திலா? இல்லை அதற்கப்பால் உள்ள "சந்திரன்"-"செவ்வாய்" கிரகங்களிலா? அதி ஆற்றலுள்ள பறக்கும் தட்டும் மனிதனா?(E.T)

இன்றைய விஞ்ஞான உலகம் [NASA, ESA, CERN, COSMOS, ARIAN] இதை நோக்கியே செல்கின்றது. அதற்கு அடிப்படையாக அவர்கள் எடுத்துக் கொண்டது சமயக் கருத்துக்களும் அவற்றின் பின்னணியில் உள்ள விஞ்ஞான கண்டுபிடிப்புகளும். குறிப்பாக 'சைவசமயமே" அத்திவாரமாகவுள்ளது. அப்படியான விஞ்ஞானக் கருத்துக்களையும், கண்டுபிடிப்புக்களையும் இப் பூவுலகில் உள்ள அனைவரும் உணரும்படியாக செய்வதற்காகவே 'கதிர்' வெளிப்பட்டுள்ளது. இக்கதிரின் சிந்தனைகள்-வெளிப்பாடுகள், மடங்களிலும், ஆச்சிரமங்களிலும், ஆதீனங்களிலும் இல்லாமல், படித்தவர்கள் மட்டுமே ஆராய்ச்சி செய்யக் கூடிய தத்துவ புத்தகங்களிலும், சில இன(மத) பிரிவினரின் ஏகபோக உரிமையாகவும் இல்லாமல், உலகம் முழுவதும் உள்ள பாவிகள், புண்ணிய சாலிகள், பக்தர்கள்-பாமரர்கள் சூழ்நிலையோடு கலந்த ஒன்றாகட்டும்.

'விழுமின்' 'எழுமின்' "சுதந்திரம் பெறுமின்" — 'கதிர்'

படிப்பகம்

padippakam

திரு. செ. துரைத்தினம்:
பன்னாட்டு தமிழுறவு மன்ற உலகளாவிய மாநாடு.
பேர்லின் - ஜேர்மனி.

வணக்கம்:

ஆரியன் உலகத்தை நிலைநிறுத்துவது:
[REESTABLISHMENT OF ARYAN WORLD - RAW]

தங்களால் இன்று முதல் 12/8/93 தொடக்கம் 15/8/93 வரையும் கூட்டப்பட்டுள்ள மேற்படி மாநாடு பற்றிய ஈழவர்களின் கருத்துக்களை - சிந்தனைகளை மொழி, மதம் என்பவற்றுக் கூடாக தங்கள் வேலைத்திட்டதி கொண்டு வந்துள்ளோம். இதனை நாங்கள் பூரணமாக விளங்கி கொண்டு மாநாடு நடத்துவதுதான் சாலச் சிறந்ததாகும். அல்லது போனால் ஒரு பக்க சார்பாகவே நாங்கள் இருக்க வேண்டி வரும். அதுமட்டுமல்ல மொழி, மதம் என்பவற்றுக்கு முன்பே கதிர் "சமநிலை", மனிதன் VS மனிதன் திரு. ராஜீவ் காந்தி படுகொலைபற்றிய சிந்தனைகளை வெளிக் கொண்டு வந்தது. ஆனால் தற்போது அவற்றை அனுப்ப வசதியின்மையால் அவற்றை திரு. ஜராக் இன்பராசாவிடம் பெற்றுக் கொள்ளவும், அல்லது ஈழகேசரி பேர்லின் பிரதிநிதி திருமதி ரூபினி செல்வகாந்தன் பெற்றுக் கொள்ளவும். [SKARBINA STR. 88, 1 BERLIN-49]. கதிரின் வெளியாக்கங்களால் RAW ஆனது இந்து மதம் என சுவிற்சலாந்திலும், பன்னாட்டு தமிழுறவு என பேர்லினிலும் ஆய்வாளர்களாக முதலில் வெளிவந்து அறிஞர்களாக காட்ட முயல்கின்றது. இவை என்னத்தை புலப்படுத்துகின்றது என்றால் ஆய்வுகள் - அறிவுகள் என்பதை பிரயோகிப்பது அதுதனி வரவில்லை எனில் அரக்கத்தனத்தை மேற்கொள்வது. இதுதான் ஆரியத்தின் அடிப்படை ஆகும்.



படிப்பகம்

padippakam

ஆரியம் மொழி அடிப்படையில் ஜெர்மனியில் உற்பத்தி ஆகி, மத அடிப்படையில் இந்தியாவை ஆக்கிரமித்ததென்றாகும். ஆனால் ஆரியம் - பார்ப்பனியம் என்ற கிரேக்க - ரோம காலத்திற்கு முற்பட்ட நாகரிகமடையாத அரக்கப் பண்புகளாகும். மேற்கே மக்கள் நாகரிகம் அடைந்ததும் இப் பார்ப்பனியம் அழித்து விரட்டப் பட்டது. அது ஜெர்மனியில் மொழி ரீதியாக ஆரியனிசமாக நிலைநிறுத்தி, பின்னர் கிழக்கில் காலூன்றியது. கிழக்கில் சிந்துவெளி பள்ளத்தாக்கில் நிலைகொண்டு இந்துஇயம் என்ற மதத்தின் போர்வையில் ஆக்கிரமித்தது. இதனால்தான் தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும் என்ற பிரகடனம் ஜெர்மனிக்கு வழுவந்துள்ளது.

ஆனால் தமிழின் உயர்வு உலகில் சங்கங்கள் தோன்றிய காலத்தில் இருந்தே சங்கம் வளர்த்து (சங்குத் தொழில் செய்து) வளர்க்கப் பட்டதால் அது அழியாதிருக்கும். சங்குத் தொழில் இன்றும் ஈழத்தில் மேற் கொள்ளப்படுவதால், தமிழகத்திற்கு எவ்வளவு கட்டுப்பாடு உள்ளதோ அதைவிட பன்மடங்கு ஈழவருக்கு உண்டு என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது

சங்கறுப்பது எங்கள் குலம்
சங்கரனார்க்கு ஏது குலம்,
சங்கை அறுத்துண்டு வாழ்வோம் அரனே
நின்போல் இரந்துண்டு வாழ்வதில்லை காண். (நக்கீரர்)

இதில் சங்கரனார் என்பது உயிர்களை அழிக்கும் ஒன்றாகவும். சாதி - மதம், குலம், நிறம் என்பதற்கு ஒன்றாக சொல்லப்படுகிறது. 2ம் ஆரியனானாலும், அரசனானாலும், ஆண்டவனானாலும் அவர்களிடம் பிச்சை கேட்டு பிழைக்க மாட்டோம் எனக்கு கட்டமான சங்குத் தொழில் (சங்கம்) செய்வோம் என மார்தட்டுகின்றார். இதனையே 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என சான்றோர் கூறியுள்ளார், புரிந்ததா!? கதிர்.

கி. ... - திகதி - 12.1.93.

படிப்பகம்

padippakam

தமிழறிஞர்கள்.
திரு. செ. துரைத்தினமூடாக.
பன்னாட்டு தமிழுறவு மன்ற உலகளாவிய மாநாடு.
பேர்லின் - ஜேர்மனி.
வணக்கம்!

## "மொழி"

'உயிர்களின் இயல்புகளையும், திறன்களையும், ஆற்றல்களையும் அகபுற ரீதியாக உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் 'ஒலி' வழியான இயிமீட்டுத் தொகுதியே மொழியாகும்." ஒலிவழியான சொல்லும், பொருள் வழியான கருத்தும், ஒளிவழியான எழுத்தும் ஒன்றை ஒன்று பிரதிபலித்து உணர்த்தும் போதுதான் உயிரோட்டமுள்ள மனித மொழியாக துலங்குகின்றது. உயிரும், மொழியும் எப்போதும் மரபு ரீதியாக சங்கமித்துள்ளன. உயிர்களுடன் மொழி உள்ளார்ந்த ரீதியாக சங்கமமாகும் போது மௌனமாகிறது. அப்போ உயிர் தனது தனித்துவமான இயல்பை அடைகிறது இயல்பாகவே. உயிரில் இருந்து மொழி (ஒலி, ஒளி, பொருள்) புறரீதியாக தோற்றம் பெறுகையில் (பிணைப்பு ஏற்படும் போது) அணுவில் இருந்து அண்டம் வரை எடுத்துச் செல்கின்றன. ஆகவே இவ்வுலக வாழ்க்கை திட்டப்பட்டு(கட்டுப்பட்டு அவற்றின் ஆதிக்கம், ஆக்கிரமிப்பு என்பவற்று க்கு) வாழுவதற்கும்! அதே போல இவ்வுலக கட்டுப்பாடு, ஆக்கிரமிப்பு, ஆதிக்கம் என்பவற்றில் இருந்து விடுபட்டு சுதந்திரம் பெறவேண்டும் என்றாலும் மொழி ஒரு சிறந்த ஊடகமாக அமைந்துள்ளது.

ஆதியில் மனிதன் தன்னைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், அடிமைத்தனம் என்பவற்றில் இருந்து விடுதலை பெற்று சுதந்திரம் பெறும் ஊடகமாகவே மொழியை உருவாக்கினான். இதன் காரணமாகவே பண்டைய மனிதன் அல்லது சான்றோர்கள் தமதுயிரிலும் மேலாக தமது மொழியை பாதுகாத்து, வளம்படுத்தி வந்தனர். இதன் உச்சக் கட்டமாக இற்றைக்கு பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனித மொழிகள் தமக்கு என்றொரு மரபை ஏற்


படிப்பகம்

padippakam

படுத்தியுள்ளன. விடுதலையையும், சுதந்திரத்தையும் மரபு ரீதியான இலக்கணங்களும், இலக்கியங்களும் பெரும்பான்மையாக தழுவி வந்தன. மரபு ரீதியான மொழிகளையும், இலக்கண, இலக்கியங்களையும் ஆக்கிரமித்து, ஆதிக்கம் செலுத்தி உள்வாங்கிய சமகால மொழிகளும், இலக்கியங்களும் உலக வாழ்க்கையில் கட்டுப்பட்ட அடிமைத்தனத்தையே பெரும்பான்மையாக தழுவி வருகின்றன இம்மொழிப் பண்புகளே இன்று உயிர்களை உயர்வடையச் செய்வதும், உயிர்களை நாசம் செய்வதும். இக்கருத்துக்களைய ஈழத்தின் மரபு மொழி என்ன? ஆக்கிரமிப்பு மொழிகள் எவை? என்பதை மேற் கொண்டு பார்ப்போம்.

மரபு ரீதியான மொழிகள்: ஈழத்தின் பண்டைய மக்கள் பேசிய மொழியென "எலு" மொழியே ஈழத்தின் மரபு மொழியாகும் இம் மொழியே காலத்துக்கு காலம் புறமொழிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆதிக்கம் செலுத்தப்பட்டு உள்வாங்கப் பட்டதால் எலு மொழி இன்று உருமாற்றம் பெற்றும் தக்க வைத்துள்ளது. எலு மொழியை தழுவி உருவாகிய மொழிகள் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பனவாகும் உள்வாங்கிய மொழிகள் சமஸ்கிருதம், போன்ற வட மொழிகள் என்பனவாகும். எலு மொழியின் நேரடி தாக்கம் பண்டைத் தமிழ், செந்தமிழ் என்பவற்றிலும் இலிபாக சாமகான வேதம் மற்றும் வேதங்களிலும் இசையுவில் இருப்பதைக் காணலாம். தற்கால மொழிகளான தமிழ் மலையாளம், கன்னடம், சிங்களம், என்பன சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்காலத்தில் தோற்றம் பெற்றன. ஆனால் இம் மன்னர் காலத்திற்கு முன்பே ஈழத்தில் அரசாண்ட மன்னர்கள் - மக்கள் சீரும்-சிறப்பாகவும், மொழிவளம் நிறைந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள். இதனால்தான் ஆதியில் இருந்து இன்றுவரை ஈழத்தை ஆக்கிரமிப்பதும், ஆதிக்கம் செலுத்துவது தொடர்கிறது. ஈழத்தை ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்துவதில் தமிழும், சிங்களமும் ஒன்றை ஒன்று சளைத்தவர்கள் இல்லை என்பதை தமது மரபு ரீதியாக இன்றுவரை நிரூபித்து வருகின்றன.


படிப்பகம்

<u>சிங்களம்</u>:- சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கர்நாடக மாநிலத்தில் புதிய இன்னூர் என்னும் (சங்கநாத்) மாவட்டத்தில் மைசூர்-கூர்க் என்னும் பகுதிகளில் தலைவர்களாக இருந்தார்கள். நன்னிச் சிங்களவர்கள் "ராஜேந்திர சோழன்" என்ற அடைமொழியுடன் சங்கநாத்தை தலைநகராகக் கொண்டு முதலாவது சிங்கள ராச்சியத்தை பிரகடனப்படுத்தினான். இவர்களின் வழித் தோன்றல்களாக காற சிம்மன் என்ற பெயரில் கங்கைராச்சியத்தையும் உருவாக்கியவர்கள், 14ம் நூற்றாண்டில் இலோத்துங்க சோழர் என்ற பெயருடன் ஆண்டு வந்தனர். சோழ அரசு வீழ்ச்சி அடைந்ததும் கோசல நாட்டில் இலோத்துங்க என்ற பெயரில் ஆட்சி செய்தனர். ஆனால் 14ம் நூற்றாண்டில் முஸ்லிம் படையெடுப்பினால் கோசல நாடு வீழ்ச்சி அடைந்த போது சிங்களவர்கள் விஜயநகருக்கு புலம் பெயர்ந்தனர். இச் சிங்களவர்களை விஜயனினால் ஈழத்தில் கொண்டு வந்து குடியேற்றப்பட்டவர்களாவார்கள். 10ம் நூற்றாண்டில் இருந்து 17ம் நூற்றாண்டு வரை சோழ அரசு நிலை பெற்றிருந்ததால். சிங்கள இனம் பாதுகாக்கப்பட்டது. சோழ அரசர்களான ராஜேந்திர சோழர், ராஜராஜ சோழர், கரிகால சோழர், இலோத்துங்க சோழர் ஆகியோர் ஈழத்தை ஆக்கிரமித்து அடிமையாக்கிய போது, இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த சிங்களவர்கள் ஈழத்தில் தமக்கு என்று ஒரு பகுதியை நிலைப்படுத்திக் கொண்டனர். இவர்களே தம்மை சிங்கள மன்னர்களாகவும், அப்பகுதிகளை சிங்கள நாடுகளாகவும் சுவீகரித்துக் கொண்டனர். இவர்கள் இந்தியாவில் ஆதியில் சைவர்களாகவும், சோழர் காலத்தில் வைணவர்கள் (சமணர்களாகவும்) விளங்கினர். ஈழத்தில் வரும்போது சைவர்கள் பௌத்த மதத்தை தழுவியிருந்ததால் இவர்களும் பௌத்த மதத்தை தழுவினர். இதனால்தான் ஈழத்தில் உள்ள பௌத்தர்கள் விஷ்ணுவை தமது கடவுளாகவும், வழிபட்டனர். ஆகவே மகாவம்சத்தில் விஜயனின் வழித்தோன்றல்கள்தான் சிங்களவர் என்று கூறுவது எவ்வளவுக்கு உண்மை இருக்கிறது என்பது தெரியவில்லை? ஏனெனில் விஜயன் ஈழத்திற்கு வரும்போது இராட்சர்களும் - இயக்கர்களும் - நாகர்களும் வாழ்ந்தார்கள் எனக் கூறியவ

padippakam

ர்கள் ஏன் மீண்டும் ஈழத்திற்கு வரவேண்டும்? விஜயன் வரும் போது இயக்கர்களும் நாகர்களும் இருந்தனர் என்றால் விஜயன் திரும்பிச் சென்று விஜய நகரில் உள்ள சிங்கள வரை அழைத்து வந்திருக்க முடியும். ஏனெனில் விஜயநகருக்கு சிங்களவர் 14ம் நூற்றாண்டில் சென்றவர்கள். அக்காலத்தில் சோழர்கள் . ஈழத்தை ஆண்டனர். சோழர் காலத்தில் இயக்கர்களோ - நாகர்களோ இல்லை. ஈழவர்கள்தான் வாழ்ந்தவர்கள். எனவே விஜயன் என்ற பாத்திரம் மகாவம்சத்தில் இடைச் செருகலாகவும், புனை காவியமாகவும் சேர்க்கப்பட்டதாகவே உள்ளது. ஈழத்தில் முதல் குடியேறினவர்கள் சிங்களவர்கள் என்பதை நிறுவிப்பதற்காகவும் - ஈழம் சிங்கள நாடு என அறிவிப்பதற்காகவும். பொலநறுவை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் ஆட்சி செய்த சோழர்களை ஈழத்தில் உள்ள சிங்கள வம்சாவழியினராவார்கள்.

சிங்களவரின் காவியங்களான மகாமண்டலிக, மண்டலேஸ்வர, மகாமண்டலேஸ்வர என்பன ஈழத்தில் மகாவம்சம், ராஜவலி, ரகுவம்சம் என்ற பெயரில் மிகைப்படுத்தப் பட்டு மாற்றம் செய்யப்பட்டன. சிங்கள மொழியில் தோன்றிய முதலாவது இலக்கியம் "சீலாவதி" ஆகும். மணிபல்லவம், வல்லெட்டித்துறை, புலோலி, பல்லப்பை என்பவற்றின் வரலாற்றையும், வைணவ மதத்தின் பாரம்பரியத்தையும் இவ்விலக்கியத்தில் வல்வெட்டித்துறையில் இருந்து தெவுந்துறை வரையும் என தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. சிங்கள விளக்கமானது பாதாமி, சாளுக்கியம், கங்கை சிஹலங்கா என ஆக்கிரமித்தாலும் இன்று சிறிலங்கா என்றே நிலைத்துள்ளது. ஏனையவை எல்லாம் மாற்று மொழி, மதம் என்பவற்றால் அழிக்கப்பட்டு, உருமாற்றப்பட்டு தேய்ந்து விட்டது. சிறிலங்காவில் சிங்களம் தொடர்ந்து நிலைக்குமா என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும்

படிப்பகம்

padippakam

**தமிழ்:-** தமிழா என்ற ஆரிய சொல்லில் இருந்து தோன்றியதாகும். இந்தியாவின் ஆதிக் குடிகளான, பூர்வீகமான திராவிட மரபைச் சேர்ந்த மக்களை, ஆசியாவின் மத்திய பகுதியில் இருந்து குடியேறிய வெள்ளை நிற மக்கள் தமிழா என அழைத்து வந்தனர். பிற்காலத்தில் இந்தியாவில் நிலை கொண்டு ஆட்சி அமைத்த இவ்வெள்ளை இனமக்கள் அல்லது சிற்றரசர்கள், மன்னர்கள் - திராவிடர்கள், ஈழவர்கள் மீது தமது ஆதிக்கத்தையும், ஆக்கிரமிப்பையும் மேற்கொள்வதற்காக 'தமிழ்' என்ற அடைமொழியை தம்முடன் சேர்த்துக் கொண்டு தமிழ் மன்னர்களாக பிரகடனப் படுத்தினர். "யாயிதி" என்கின்ற வடநாட்டு ஆரிய மன்னர்களின் குலவம்சங்களாக விளங்கிய சேர, சோழ, பாண்டிய சிற்றரசர்களே திராவிட நாடையும், ஈழத்தையும் தமிழ் என்ற போர்வையில் அடிமை கொண்டனர். ஏனெனில் திராவிடர் அல்லது ஈழவர் முற்றிலும் மாறுபட்ட இனமாகவும், மொழி உட்பட (திராவிட, எலு) சகலவற்றிலும் நிலைத்தும் - சிறந்தும் விளங்கியிருந்ததான் முக்கிய காரணம். இதனால் மொழியையும், சமயத்தையும் உள்வாங்கி அதையே மீண்டும் திராவிடர்கள் - ஈழவர்கள் மத்தியில் தமிழாகவும், மதமாகவும் பலவந்தமாக திணித்தனர்.

திராவிட மொழியான பண்டைத் தமிழும் (செந்தமிழ்), எலுமொழி என்பன வடமொழியான சமஸ்கிருதத்திற்கு (வேதங்களின் அடிப்படையிலும், பாணினியின் இலக்கணத்தின் மூலம்) முன்பே புழக்கத்தில் இருந்தன. வடமொழி இலக்கியங்களில் திராவிட இலக்கியங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. வேதங்களில் முதல் வேதமான இருக்கு வேதத்தில் திராவிட இலக்கியங்கள் பற்றி குறிப்பிடுகின்றன. மகாபாரதத்தில் அர்ச்சுனன் ஈழத்திற்கு தலயாத்திரை செய்யும் போது உலுப்பி என்னும் ஈழத்தரசியை திருமணம் செய்தான் எனவும். அப்போது உலுப்பி அர்ச்சுனனுக்கு பரத நாட்டியம் மூலம் கலைகளையும், அதன் சிறப்புக்களையும் உணர வைத்து காணிக்கையாக வழங்கினாள் என வரலாறு உண்டு. கி.முன்னர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது.



படிப்பகம்

padippakam

இதன் விபரங்களை இத்துடன் இணைக்கப் பட்டுள்ள "க
ழுமும் - மதமும்" என்பதில் காணவும். எழு, திராவிட மொழி என்ப
நடைமுறை மொழிகளின் ஆதிமொழிகளான பண்டைய மொழிகளுக்
ஈடானதும் - இணையானதும் என்பதை மேற்கொண்டு பார்
க்கலாம்.

திராவிட மொழியைப் பற்றி தமிழகத்தின் அறிஞர்கள் ஆராய்ச்
சி செய்யும் வேளை ஈழத்து மொழியான எழுவையும் சமகால
தில் பிறப்புற வைக்க வேண்டும். எழு மொழியும் திராவிட மொழியும்
ஒன்றில் இருந்து ஒன்றை பிரிக்க முடியாது. ஏனெனில் கற்காலம்,
பொற்காலம், நவீன காலம் ஆகியவற்றில் ஈழவர்கள் திராவிட மொழிக்கு
தமது காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளனர். அவையாவன.

முதலாவது சபை:- பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் (கி.மு) முத
லது சபை புலஸ்த்தியர், குபேரன், ஆகிய [illegible] இயக்க அரசர்க
ளாலும் அகத்திய முனிவரினாலும் மற்றும் 80 அரசர்களாலும்
7 புலவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 4400 வருடங்கள்
நடைபெற்றது. இக்காலங்களில் எல்லாமாக 4449 பேர் உறுப்பி
னர்களாக விளங்கினர். இச்சபை மூலம் முதன் முதல் உருவாக்
கப் பெற்றதே தமிழ் இலக்கணமாகும். இவ்விலக்கணம் அக
த்திய இலக்கணம் எனப் பெயர் பெற்றது.

இரண்டாவது சபை:- அகத்தியரின் பரம்பரையினராலும், தொல்
காப்பியினாலும் - இராவணன் போன்ற அரசர்களாலும் [illegible]
ஜம் 59 அரசர்களும், 5 புலவர்களும் உறுப்பினர்களா கொண்டு
விளங்கியது. இச் சபை 3700 பேர்களால் 3700 வருடங்கள் வரை
தொடர்ந்தது. இச் சபை தொல்காப்பிய இலக்கணத்தை இயற்றியது.

கடைச் சங்கம்:- நக்கீரர் உட்பட பாண்டிய மன்னர்கள் ஈழத்து
பூதந்து தேவனார் உள்ளிட்ட 49 பேரறிஞர்கள் மூலம்
1850 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்றது, இச்சபை தொ
ல்காப்பிய - அகத்திய இலக்கணங்களை அடிப்படையாக கொண்டு
அகநானூறு, புறநானூறு, திருக்குறள், நான்மறைகள் என்பன இயற்
றப் பட்டன. இவற்றில் குறிக்கப்பட்ட காலங்கள் இதிகாசங்கள்


படிப்பகம்

padippakam

புராணங்கள் என்பவற்றில் கன்ன பரம்பரையாக கூறப்பட்டதால் மிகைப்படுத்தப் பட்டிருக்கலாம். அதே போல் குமரிக் கண்டம், லெமூரியாக்கண்டம், நகர்வுகளால் சிதைந்தது, பிரிந்தன எனக் கூறுவதும் ஆரியக் கலாச்சாரத்தை மெய்ப்பிக்கவும், திராவிட கலாச்சாரத்தை பொய்ப்பிக்கவும். ஏனெனில் இந்தியக் கடாநாட்டில் இறுதியாக நடைபெற்ற கண்ட நகர்வு 15000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதாகும். 12000 ஆண்டுகளின் பேரதுதான் மொழியே தோன்றியதாகும். ஆகவே முதல் சபை கி.மு. 300-500 ஆண்டு காலத்திலும் அதைத் தொடர்ந்து மற்றைய சபைகளும் நடைபெற்றது.

தமிழ் எழுத்து:- கிறிஸ்த்துவுக்கு முன்னர் 850ம் ஆண்டளவில் உருவானது. இவ் எழுத்து பண்டைத் தமிழ் அல்லது வட்ட எழுத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவானவையாகும். இத் தமிழ் எழுத்துக்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்காலத்தில் இத்தமிழ் மன்னர்களின் அரண்மனைக் காவலராகவும், கடலோடிகளாகவும் இருந்த கிரேக்கர்களின் கணிசமான பங்களிப்பு. மூலம் திருந்த வடிவம் உருப் பெற்றவையாகும். ஆனால் வட்ட எழுத்தானது கி.மு 250 ஆண்டுகளுக்கு முன்னரே குறியீட்டு எழுத்துக்களாக இருந்தன. எகிப்தில் உள்ள கல்வெட்டுக்களிலும், மண்பாத்திரங்களிலும் குச்சிகளாலும், கைவிரல்களாலும் பொறிக்கப்பட்ட குறியீட்டு எழுத்துக்களும், மரச் சாயங்களால் பொறிக்கப்பட்ட முத்திரைகளும் (வர்ணங்களும்) எழுத்துக்காட்டுவதாக கூறுகின்றனர். இந்தக் குறிகள், வர்ணங்கள் புதவதிகள் அடிப்படையில் அமைந்ததே இன்றைய நவீன முறையான பற்றிக் சாயம் புகுதலாகும். இன்று உலகிலேயே சிறந்த பற்றிக் எழுத்து பற்றிக்தான்.

தமிழ் இலக்கியம்:- கிறிஸ்த்துவுக்கு முன்னர் 300 ஆண்டளவில் முதல் தமிழ் இலக்கியம் தோன்றியது. எழும், திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுர இவை பெரும்பாலும் ஏட்டு வடிவத்தில் இருந்தன. கி.பின்னர் 550ம் ஆண்டில் திருவள்ளுவரினால் திருக்குறளும், ஔவையாரினால் சிந்தாமணியும் இயற்றப் பெற்று அவைமாக்கப் பட்ட முதல் தமிழ் மறைகளாகவும் பெற்றன. பாணினியின் சமஸ்கிருத இலக்கணம் 2400 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக கூறுகின்றனர். ஆனால் அசோக சக்கரவர்த்தி காலத்திற்கு

 நான்கிலாந்து இடங்களில் உள்ளன.

படிப்பகம்

padippakam

(கி.மு. 264-234) முன்னர் வடநாட்டில் எந்த ஒரு கல்வெட்டும் கிடைத்தில்லை எனவும் ஆகவே பாணி இலக்கணம் என்பதை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

அகத்திய இலக்கணத்தில் இருந்து, திராவணியம் என்னும் இசை வழியான சாமகான இலக்கணமும் தமிழ், சிங்களம் என்கின்ற இலக்கணங்களையும் காலங்களமாக ஈழவர்கள் தமது உயிர், உடல், உடைமை என்பவற்றையும் சமயம், மொழி, நாடு என்பவற்றையும் சமர்ப்பணமாக அர்ப்பணித்து வரலாறாகவே நிலைத்து நிற்கின்றனர். ஈழவர்களின் இலட்சியமான அர்ப்பணிப்பு பின் உள்ளார்ந்த அர்த்தம் உயிர்களுக்கு விடுதலையும், சுதந்திரமும் பெறச் செய்வதாகும். இவ்வுயர்ந்த உயிருக்கும் மேலான இலட்சியத்தை மதம், மொழி (தமிழ், சிங்களம்) மற்றும் தேசியம் என்ற இருதய வட்டத்திற்குள் உள்ளடக்கி ஆண்டான்-அடிமை நிலமையை ஏற்படுத்த முயற்சியால் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போலவும், மற்றும் காலனித்துவ சாம்ராஜ்யங்கள் போலவும் கல்வெட்டுகளிலும், காட்சி சாலைகளிலும் கட்டுப் புத்தகங்களிலும்தான் காண முடியும்.

ஈழத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆரியரினால் (சேர, சோழ, பாண்டிய, பல்லவ) ஆக்கிரமிக்கப் பட்ட நாடும், ஈழவர்கள், எது என்பன, இதுகாலத்தில் அன்றி இருநூறு ஆண்டுகளாக நடைபெறும் பிரச்சனைகளால் மூடி மறைக்கப் பார்க்கின்றனர். ஆனால் இவர்கள் ஒன்றை மறந்துவிட்டனர். ஐரோப்பிய படை எடுப்பினால் நிலை குலைந்த இந்த ஆரியமன்னராட்சி ஒன்று திரண்டு சிங்களம் - தமிழ் என்ற புதுவடிவத்தை பெற்றுள்ளது. ஐரோப்பிய காலனித்துவ வெளியேற்றத்தின் பின்னர் சிங்களமும் - தமிழும் தமது பாரம்பரிய இனமான தமக்குள் தாமே ஒன்றை ஒன்று குத்துப்பட்டு, வெட்டுப்பட்டு தமக்குத் தாமே அழித்தொழிக்கின்றன. சிங்கள மக்கள் மத்தியில் இத்தன்மை கட்சி ரீதியாக பிரதிபலித்தாலும், தமிழ் பகுதியில் பலவேறாக காணப்படுகின்றன. இதன் பிரதிபலிப்புத்தான் தமிழ் என்


படிப்பகம்

padippakam

பெயரில் பலவாறாகவும், பலவேறாகவும் பிரிந்து நின்று செயல்படுகின்றன. இப்பிரிவு பட்ட தன்மையால் தேசிய, பிராந்திய, சர்வதேச அளவில் பலவீனப்படுகின்றன. இதன் ஒரு கட்டமாகத் தான் பரந்து பட்டு வியாபித்து நிற்க வேண்டிய தன்மையை இழந்து, வர, வர பிரதேச ரீதியாக ஒடுங்கிச் செல்கின்றது. ஈழம் என்பது மலையகம், வடக்கு, கிழக்கு என மாறி, பின்னர் மலையகம் நீங்கலாக வடக்கு-கிழக்கு என ஒடுங்கி இன்று வடக்கு என சிறுத்துப் போய்யுள்ளது. இது மட்டுமல்ல தமிழர்கள் என்ற சர்வதேச நிலை போய் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் எனவும் பிரிந்தும்! லண்டன் தமிழர், ஐரோப்பிய தமிழர் (பாரிஸ், சுவிஸ், ஜெர்மன், டென்மார்க், நோர்வே) என பலவாறாக வேறுபட்டும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா என கண்டம் விட்டுப் போய் நிற்கின்றன.

சைவ சமயம் என்ற ஒருமைப்பாட்டுடன் இருந்த ஈழவர்கள் தமிழ்-சிங்களம் என்ற அதிகாரத்தினால் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் என வகுக்கப்பட்டு அந்நியப்பட்டு நிற்கின்றன. அண்மைக் காலத்திலும் மொழி, மதம், தேசியம் என்று இறுகிய நிலைக்குள் இறுக்கத்தனமாக அமைந்து போகாமல் ஈழவர்களாக முன்னோடிகளாக இருந்தவர்கள் தான் ஈழவர்கள் மீது சுமத்தப் பட்டுள்ள ஆண்டான்-அடிமை நிலைமையை நீக்கி சுதந்திரம் பெறச்செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத நிலையில் சேரன், சோழன் பாண்டியன், பல்லவன் பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தும் ஒன்றாகவே அமையும். ஈழவர்களின் இவ்வம்சங்களாகவும், ஒரு மொழியை அடிப்படையாகவும் கொண்டுள்ள 25 கோடி மக்களான திராவிடர்களும்-ஈழவர்களும் கடந்த 2500 வருடத்தில் 2.5 கோடி மக்கள் ஒருமையாக மாற்றப்பட்டுள்ளனர். மொழியின், மதத்தின், இனத்தின் பெயரால் ஈழவ இல்லாது அழித்தொழிப்பதை மாவீரர்களாக்கி அன்றி ஈழவர்களுக்கு மதம், மொழி, இனம் (தேசியம்) என்பவற்


படிப்பகம்

துக்கு முக்கியத்துவம் அளிக்காமல், அறியாமல் ஈழவர்களாக
நினைத்திருப்பதை தியாகம் என தீர்மானிப்பதா என்பதை
ஈழவர்களிடம் முன்னிற்கிறது. அதற்கு முன்னர் ஈழவராக
ஒற்றுமைப் பட்டு, ஒற்றுமையுடன் சிந்திக்க வேண்டும்.

ஒலி வழியான சொல்லும், பொருள் வழியான
கருத்தும் இரண்டையும் ஒளிவழியான பூரணத்துவமாக் எடுத்து
கொண்டிருப்பதால் உயிரோட்டமாக, ஈழவர்களின் நிலை
யை உயிரோட்ட முள்ள ஒளிக் "கதிராக" நிலைக்க வேண்
டும் என்பதற்காக கதிர் மூலம் எழுத்து வடிவமாக கொ
ண்டு வரப் பட்டுள்ளது.

வரலாறுகள், பண்புகள் என்பவற்றை கொச்சைப் படுத்தி
ஆசிரியர் தலையங்கம் (28/7/93) எழுதியுள்ள வீரகேசரியாரே
கதிரின் மென்னொளி பட்டதுமே சிவசிதம்பரங்கள், சீர்னி
வாசன்களும், தொண்டமான்களும், மறவன்புலத்தாரும்,
பொன்னம்பலங்களும், காவாய் சுப்பிரமணிய சுவாமிகளும் தலைத்
தலில் வாசிப்பதும். சுவிற்சலாந்தில் இந்து கலாச்சார மாநாடும்,
பேர்லினில் பன்னாட்டு தமிழ் மாநாடும் கூட்டுத் தலில் வாசிப்பதும்
இவற்றுக்கு தலைமை வகிப்பதும், ஆசிரிய தலையங்கம் கொடுப்பதும்
ஆட்டம் கண்டுள்ள ஆசியத்திற்காக வடிக்கும் முதலைக் கண்
ணீர் என்பதை உலகம் உணரும். பன்னாட்டு தமிழுறவு
ஸ்தாபகரும், அமைப்பாளரும், வித்தகரான புலவர் பெருஞ்சித்
திரனார் மொழி, மதம் என்பதை விட திராவிட மக்களுக்
கே முக்கியத்துவம் கொடுத்து ஐரோப்பா வந்த போது அவ
ரை வரவேற்று ஆதரித்தோம். அதே போல் பெருங்கவிக்கோ
1985ம் ஆண்டு வந்த போதும் ஆதரித்தோம். ஆனால் இன்
று பெருஞ்சித்திரனாரின் இரவலையை நசித்து. மனித
நேயத்தை படுகொலை செய்து விட்டு பன்னாட்டு தமிழுற
வு என்ற பெயரில் எத்தனை மாநாடு வைத்தாலும் அது
'பசித்தாலும் போர்த்த புலிதான்' என்பதை கதிர் வெளிப்படுத்தி
வெறுமையானதாக்கும். - நன்றி -

'கதிர்'

இடம் - பிரான்ஸ். திகதி 12.08.93.

படிப்பகம்

padippakam

"ஈழம்"


ஈழத்திற்கு பௌத்த மதத்தை பரப்ப அன்றி பாது காக்க கூறி இலங்கை (ஈழம்) அரசர்களிடம் தஞ்சம் புகுந்த "லம்பகர்ண" பரம்பரையைச் சேர்ந்த வட இந்தியர்களே ஈழத்தை முதன் முதலில் ஆக்கிரமித்தனர். "வசபக", "சங்கபோதி", "கொத்தியாய் மோரியாக்ஸ்" என்கின்ற லம்பகர்ண இனத்தை சேர்ந்தவர்கள் கி.பின்னர் 2ம் நூற்றாண்டில் ஈழத்தை அரசாண்ட 'சாந்தமுக சிவா', இலங்கேஸ்வரனை ஏமாற்றி (பௌத்த மதத்தை பரப்ப வந்ததாக கூறி) அரசாட்சியை கைப்பற்றினார். இதே போல வடக்கில் அரசாண்ட இலங்கேஸ்வரனின் பேரனை வசபகா என்பவன் தாக்கி தானே அரசனானான். வசபக மன்னனின் பரம்பரைதான் 'கஜபாகுமுனி' என்ற வம்சமாக அநுராத புரத்தில் ஆட்சி செய்து பௌத்த மதத்தை பலவந்தமாக பரப்பியது. இவர்களின் விபரங்களை படத்திற்கு மறுபக்கம் காணலாம்.

தாசா:- சமூகத் தலைவர்களாகவும், சேவகர்களாகவும் இருந்த கறுப்பு இன மக்களை 'தாசா' என அழைப்பர், அத்துடன் இவர்களே அந்நாட்டின் பூர்வீகக் குடிகளாகவும் இருப்பர். இதனால் இவர்களை நாகோபியான ஆரியர் எதிரிகளாக கருதி அழித்து வந்தனர். ஆரியனிசம் சிந்துவெளியில் கால் வைத்ததும் அங்கு வாழ்ந்த தாசாக்களை முதலில் அழித்தது. பின்னர் சாளுக்கிய இனத்தில் உள்ள தாசாக்களை அழித்தது. இறுதியில் ஈழத்தில் உள்ள தாசாக்களை (பிரேம தாசாவை) அழித்தது. சிந்துவெளியில் இருந்து-சிறிலங்கா வரையும் கைவரிசையை காட்டிய ஆரியனிசம் இனி இந்த உலகத்தை விட்டே ஒழிவதை தவிர வேறு வழியில்லை.

படிப்பகம்


padippakam

# ஈழம்




படிப்பகம்

padippakam




படிப்பகம்

padippakam

# ஈழத்தை ஆக்கிரமித்து, ஆதிக்கம் செய்த ஆதார பதிவு (ஆரியம்)

| No. | Names of kings. | | Amended date. | Date as per Nik. Sang. | Duration of reign. |
|---|---|---|---|---|---|
| 90 | Mánavamma | ... | 668 A.D. | 664 A.D. | 35 |
| 91 | Aggrabódhi v | ... | 703 | 699 | 6 |
| 92 | Kassapa iii | ... | 709 | 705 | 6 |
| 93 | Mahinda i | ... | 715 | 711 | 3 |
| 94 | Aggrabódhi vi | .. | 718 | 714 | 40 |
| 95 | Aggrabódhi vii | ... | 758 | 754 | 6 |
| 96 | Mahinda ii | .. | 764 | 760 | 20 |
| 97 | Dappula ii | ... | 784 | 780 | 5 |
| 98 | Mahinda iii | ... | 789 | 785 | 4 |
| 99 | Aggrabódhi viii | ... | 793 | 789 | 11 |
| 100 | Dappula iii | ... | 804 | 800 | 16 |
| 101 | Aggrabódhi ix | ... | 820 | 816 | 3 |
| 102 | Séna i | ... | 823 | 819 | 20 |
| 103 | Séna ii | ... | 843 | ... | 35 |
| 104 | Udaya i | ... | 878 | ... | 11 |
| 105 | Kassapa iv | ... | 889 | ... | 17 |
| 106 | Kassapa v | ... | 906 | ... | 10 |
| 107 | Dappula iv | ... | 916 | ... | —.7. |
| 108 | Dappula v | ... | 917 | ... | 12 |
| 109 | Udaya ii | ... | 929 | ... | 3 |
| 110 | Séna iii | ... | 932 | ... | 9 |
| 111 | Udaya iii | ... | 941 | ... | 8 |
| 112 | Séna iv | ... | 949 | ... | 3 |
| 113 | Mahinda iv | ... | 952 | ... | 16 |
| 114 | Séna v | ... | 968 | ... | 10 |
| 115 | Mahinda v | ... | 978 | ... | 48 |
| 116 | Interregnum Vikrama Báhu | ... | 1026 | ... | 12 |
| 117 | Kitti the General | ... | 1038 | ... | —.—.8 |
| 118 | Mahálána Kitti | ... | 1038 | ... | 3 |
| 119 | Vikkama Paṇḍu | ... | 1041 | ... | 1 |
| 120 | Jagatipala | ... | 1042 | ... | 4 |
| 121 | Parakkama | ... | 1046 | ... | 2 |
| 122 | Lokessara | ... | 1048 | ... | 6 |
| 123 | Vijaya Báhu i | ... | 1054 | ... | 55 |
| 124 | Jayabáhu | ... | 1109 | ... | 1 |
| 125 | Vikkama Báhu i | ... | 1110 | ... | 21 |
| 126 | Gaja Báhu ii | ... | 1131 | ... | 22 |
| 127 | Parákkrama Báhu i | ... | 1153 | ... | 33 |
| 128 | Vijaya Báhu ii | ... | 1186 | ... | 1 |
| 129 | Mahinda vi | ... | 1187 | ... | 0-0-5 |
| 130 | Kitti Nissanka | ... | 1187 | ... | 9 |
| 131 | Vikkrama Báhu ii | ... | 1196 | ... | 0-3 |
| 132 | Códaganga | ... | 1196 | ... | 0-9 |
| 133 | Lilavati | ... | 1197 | ... | 3 |
| 134 | Sáhasa Malla | ... | 1200 | ... | 2 |

| | | |
|---|---|---|
| Vijaya Kúlankai (Kalinga Magha) | Segarájasékaran | circa 1210 A.D |
| Kulasékara | Pararájasékaran | 1246 „ |
| Kulóttunga | Segarájasékaran | 1256 „ |
| Vikrama | Pararájasékaran | 1279 „ |
| Varótaya | Segarájasékaran | 1302 „ |
| Martáṇḍa | Pararajasékaran | 1325 „ |
| Guṇapushana | Segarájasékaran | 1348 A D |
| Virotaya | Pararajasékaran | 1371 „ |
| Jayavira | Segarajasékaran | 1394 „ |
| | or more probably | 1380 „ |
| Gunavira | Pararájasékaran | 1417 „ |
| | or more probably | 1410 „ |
| Kanagasuriya | Sekarájasékaran | 1440 „ |
| Sapumal Kumaraya Bhuvaneka Bábu | (Senpahap Perumál) | 1450 „ |

| | | |
|---|---|---|
| 1. Kanagasuriya | Segarájasékaran | 1467 A.D |
| 2. | Pararájasékaran | 1478 „ |
| 3. Sankili | Segarájasékaran | 1519 „ |
| 4. Puvi Rája Paṇḍáram | Pararájasékaran | 1561 „ |
| 5. Kachi Nayinar (usurper) | Pararájasékaran | C 1565 „ |
| 6. Periya Pulle | Segarájasékaran | C 1570 „ |
| 7. Puvirája Paṇḍáram | Pararájasékaran | C 1582 „ |
| 8. Hendarmana Cinga (Edirmanna Singha) | Pararájasékaran | 1591 „ |
| 9. A minor son under the Regency of— | | |
| 1. Arasakésari | | 1615 „ |
| 2. Sankili Kumara | | 1617 „ |
| 10. Philip de Oliveira, Portuguese Governor, | | 1620 „ |

போர்த்துக்கேயர் - 1620-1660-
ஒல்லாந்தர் - 1660-1800-
ஆங்கிலேயர் - 1800-1948-
மீண்டும் ஆரியர் - 1948-1989 சிங்கள ஆட்சியாளர்
ஈழவர் - 1989-1993 பிரேமதாசா
மீண்டும் .... - 1993.....

படிப்பகம்

padippakam

திரு. சங்கர் தயாள சர்மா

திரு. ராம் மோகன் ஊடாக.

வணக்கம்:

## சமயமும்/மதமும்

எதிர்வரும் சனி, ஞாயிறு (24, 25.07.93) ஆகிய இருதினங்களிலும் சுவிற்சர்லாந்து இந்துமாமன்றத்தினரால் "உலக இந்து கலாச்சார மாநாடு" ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன் உள்ளார்ந்த நோக்கம் யாது? இதனை தொடர்ந்து 14,15.08.93ல் பேர்லின் மாநகரத்தில் "பன்னாட்டு தமிழ் விழா" என்ற பெயரில் ஒரு மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கதிர் 16.02.93, 16.04.93ல் "அமைதி விரும்பி" என்றும் "மனிதன் VS மனிதன்" என்ற இரு கருத்துக்களை வெளிக்கொணர்ந்தது. அவ்விரு கட்டுரைகளின் மையக் கருத்தின் அர்த்தமே, மதமோ, மொழியோ ஆகிய நோக்குடன் செயற்பட்டு வெறித்தனமானதாக அமையப்படாது என்பதாகும்.

அம்மையக் கருத்தை மீண்டும், மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் எண்ணத்துடன் சமயமும்/மதமும் என்னும் இக்கருத்து வெளிக்கொணரப் படுகிறது. அணுவுக்கு அணுவாகவும், அண்டத்திற்கு அண்டமாகவும் இருந்து பேரண்டம் தழுவியதாக கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றி தோற்றம் - இருப்பு - சங்கமம் என்கின்ற நிர்க்குணவடிவான பிரபஞ்சக் கருத்தை யுகந் திரு யுகம் வெளிக் கொண்டு வந்துள்ளது. சைவம் என்பது சமநிலை ( ± அல்ல 0) தொனித்து நிற்கும் ஒன்றாகும்.

இப்படி தொன்மையும், வரலாறும் சரித்திர சிறப்பும் மிக்க சைவ சமயத்தை சார்ந்தவர்களான நம்மவர்களோ தப்பான, தவறான முடிவை வழங்கியுள்ளனர். சகோதர மதங்களை சமத்துவமாக அரவணைத்துச் செல்லும் இந்து மதம் எனவும், பிறப்பால் இந்துக்கள் என்ற பிழையான தொனிப்பை வழங்க முற்படுகின்றது. திரு. செல்வராசா மாணிக்கம் அவர்கட்கு துணையாக திரு. கிருஷ்ணாவும் (A/K)

படிப்பகம்

உண்மையான சைவர்களாக உணர்ந்து உழைக்கும், உலகத்திற்கும் தொண்டு செய்ய வேண்டிய கட்டாயத்தை காலக்கிரமத்தில் உணர்ந்து கொள்வார்கள்.

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிருக்கும் அவ்வுயிராய்
அங்கங்கே இருப்பது நீயன்றோ பராபரமே.
எவ்வுயிர்க்கும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்
தெய்வஅருட் கருணை செய்வாய் பராபரமே.

(தாயுமானவர்)

"சொல்லுதல் வல்லான் சோர்விலான் அஞ்சான்.
துணிவு கொள் சிந்தனையான் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம் மறைப் பொருட்கிலாக்கி
நல்லையில் உதித்த நாவலர் பெருமான்..."

"எம்மையும் பயந்த ஈழ மாதாட்டின்
இணையில்லாப் பெருநிதியனையார்"

(விபுலானந்தடிகள்)

<u>மனிதத்தால்</u> சைவர்களானோம்
பெருந்தன்மையில் பௌத்தர்களானோம்.
மாண்புமிகு முஸ்லீம்களானோம்
வேதம் பயிலும் கிறித்தவரானோம்
உலகளாவிய <u>மனிதர்களானோம்.</u>
சமத்துவம், சமாதானம்
சகோதரத்துவத்தால் <u>ஈழவரானோம்.</u>

திகதி:- 21-07-93.
இடம்:- பிரான்ஸ்.

இவ்வண்ணம்
'கதிர்'

padippakam

# சமயம் > மதம்

கல்தோன்றி மண்தோன்றிய காலத்திற்கு முன்தோன்றிய பிரபஞ்சமும் பற்றிய அனைத்து வகை அறிவையும் உள்ளடக்கியதே சமயம். பிரபஞ்சத்தில் மிகச் சிறிய துளியே மதம். சமயம் ஒன்றுதான் இருக்க முடியும். பிரபஞ்சத்தில் தோன்றி, பிரபஞ்சத்தில் வாழ்ந்து, பிரபஞ்சத்துடன் சங்கமமாவதை அறியும் பண்பே சமயம். பிரபஞ்சத்திற்கு தோற்றமும் இல்லை, இடிபுமில்லை, சங்கமமுமில்லை. ஆதிமுதல் இன்றுவரை சமயநெறி மட்டுமேதான் உலகம், உயிர்கள், மனிதன், மதம் என்பவற்றை மிகவும் நுணுக்கமாக உணர்த்தியுள்ளது. இவ்வொன்றினை கீழ்க்கொண்டு பார்க்கலாம்.

உலகம்:-(பூமி):- பிரபஞ்சத்தில் இன்றைக்கு 4600 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஒரு தனிக் கோளமாக பூமி தோற்றம் பெற்றது. பூமியின் தோற்றத்தை தூசிப் படலம் என்றும், எரிகோளம் என்றும் சிற்றறிவினர் கூறுபர். பூமியானது எண்ணிலடங்கா உயிர் அணுக்களை (அணுவுக்கும் உயிராகவுள்ள) கொண்டு மிகவும் நெருக்கமாக பிணைக்கப் பட்டுள்ள தோற்றமே. இந்நெருக்கமான பிணைப்பில் விடுதலை பெற்று சுதந்திரம் ஆக மீண்டும் பிரபஞ்சத்துடன் சங்கமமாவதே இவ்வுலகத்தோற்றங்கள் அனைத்தும். முதலில் தூசிப் படலம் போலவும், அடுத்து எரிகோளமாகவும், பின்னர் எரிமலையாகவும் தொடர்ந்து கண்டங்கள், பனிமலை, மணல், சமுத்திரம், தாவரங்கள் உயிர்கள் என்ற படிமுறை வளர்ச்சியின் மூலம் விடுதலை பெற்று சுதந்திரம் பெறுகிறது. ஆகவே உயிர் அணுமட்டுமே பிரபஞ்சத்திற்கு நெருக்கமாகவும், அண்மையில் உள்ளதொன்றாகும்.

உயிர்கள்:- தூசிமண்டலம் - எரிகோளம் என்ற நிலையில் இருந்த கண்டங்களாகவும் - சமுத்திரங்களாகவும் தோற்றம் பெற்ற போது முதலாவது உயிரினத் தொகுதி



படிப்பகம்

padippakam

தோற்றம் பெற்றது. இக்காலத்தில் 'டயனோசரா' என்கின்ற இராட்சத மிருகங்கள் தோன்றின. இவற்றில் கடலின் அடியில் உள்ள சங்கும் - நட்சத்திர மீனும் உயிரினங்களின் தோற்றத்திற்கு மிக நெருங்கிய தொடர்புள்ளது. (இதையே கல்லுக்குள் உயிர் உண்டு அன்றி கடவுள் கல்லிலும் இருக்கிறார் என்ற தத்துவத்திற்கு உயிர் ஊட்டமாக இருப்பது). ஆகவே சங்குதான் ஒரு உயிர் தோற்றத்தின் ஆரம்பமாகும். இதனால் தான் சங்கு ஒலிக்கு சமயத்தில் முன்னிடம் அளிக்கப்படுகிறது. அத்துடன் சங்கில் இருந்து வரும் 'ம்ம்', ஓங்கார ஒலிக்கும் மனிதனின் மூச்சு 'ம்ம்' ஓங்காரநாதம் (HUM-HUM -- HUMAN) என்ற ஒலிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கல்லாக இருந்த உயிர் அணுக்கள் தொடர்ச்சியாக 10,000 வருடங்கள் சமுத்திரத்தில் (நீரில்) இருக்கும் போது ஓரணுவுயிராக 'அமீபா' ஆகத் தோற்றம் பெறுகின்றன. இவ் ஓரணுவுயிரின் சந்ததிகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து மனிதவுயிர்களாக மாறுகின்றன. ஒரு தாயின் கருப்பையில் (நீர் தொகுதி) 10 மாதங்கள் இருக்கும் போது மனிதவுயிராக தோற்றம் பெறுகிறது. 10,000 வருடங்களில் நீர் + கல் = உயிர் அணுவாக மாறுகிறது. 10 மாதங்களில் நீர் + அணு = உயிராக மாறுகிறது.

இவ்வுயிர் அணுக்களில் மனிதவுயிரே இறுதி நிலையாகும். அதனால்தான் மனிதவுயிரின் தோற்றம் பற்றி அறிய முடியாமல் உள்ளது. உயிரியல் இருந்து நோக்கும் போது கோளத்தில் இருந்து - கல்லும், கல்லில் இருந்து உயிரினங்களும் படிப்படியாக விடுதலை பெற்றது போல இம் மனித நிலையில் இருந்து விடுதலை பெற்று சுதந்திரம் பெறும் நிலை மனிதவுயிருக்கு இருக்கிறது என்பதை திட்டவட்டமாக அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ் இறுதி விடுதலையை நோக்கி, சுதந்திரத்தை நாடிச் செல்வதையே நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு கருமங்களும் நடைபெறுகின்றன. இதனையே 'பிறந்த இடத்தை நாடுதே என் பேதை நெஞ்சமே' எனச் சான்றோர் கூறியுள்ளனர். இந்த அடிப்படையில் உலகம் தோன்று-



படிப்பகம்

padippakam

விதம், பரிணாமரீதியாக வளர்ச்சியுறும் உயிரியல் விருத்தி நிலைகளை பொருத்தமான உவமைகள், அனுமானங்கள், உதாரணங்கள், தெளிவான விளக்கங்கள் என்பவற்றை சிறந்த, உயர்ந்த அறிவியல் மூலம் உணர்த்தும் சமயமே மனிதனின் நிரந்தரமான சுதந்திரத்திற்கு வழிவகுக்கும். அது தவிர்ந்தவை அனைத்தும் வெறும் மதங்களாகவே இருக்கும். அப்படி பழமைக்கு பழமையாகவும். புதுமைக்கு புதுமையாகவும், நவீனத்திற்கு நவீனமாகவும் விளங்குகின்ற சமயம் எது என்பதை தொடர்ந்து பார்க்கலாம்.

இன்று உலகில் ஆச்சிரமங்கள், ஆதீனங்கள், மடங்கள் திருச்சபைகள், சங்கங்கள் என மதங்கள் பலவாறாகவும் பல வேறாகவும் உள்ளன. இப்படியாகவுள்ள மதங்களிலும், மத நூல்களான வேதங்களிலும் கூறியவற்றையும், அதில் கூறப்படாது ஒழிந்தவற்றையும், பல்வேறு நுண்கலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதும், மற்ற மதங்களின் முடிபுகளையும் இடம் கண்டு தனது அகண்ட வியாபகத்தில் அடக்கித் தழுவிக் கொண்டு நிற்கும் பண்பும், வேதங்கள், தத்துவங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், பிரகடனங்கள் என்பன கலைகளாகவும், நுண்கலைகளாகவும், பல்கிப் பெருகி இருப்பது எல்லாம் இவ்வுலகில் உயிர்கள் எல்லாம் உள்ளார்ந்த அனுபவ ரீதியாக பெற்றுக் கொள்வதற்கே. இவைகளில் ஒன்றேனும் வேண்டாததல்ல, ஒவ்வொன்றும் தங்கிதல்ல. அங்கங்கெல்லாம் அனுபவங்களில் அமைந்து அமைந்து முன்னேறி அப்பெவரே பூரணமான மனிதத் தன்மை பெறுபர் என்கின்ற சமய இலக்கணத்திற்கு அமைந்த சமயம் சைவசமயமே.

அன்றி சைவசமயம் ஏனைய மதங்களைப் போல தனிப்பட்ட மனிதராலோ, அன்றி இறைக்கப்பட்ட இறைத்தூதராலோ, அன்றி விஞ்ஞானிகளாலோ தோன்றும் பெறுவில்லை. உலக, உயிரியல் உள்ளடங்கிய பிரபஞ்ச வரலாறாக அமைப் பெற்றது. அணுவில் இருந்து அண்டம் வரையான பேரண்டத்தையும் வரலாற்றாகவும் சரித்திரமாகவும், யுகங்களாகவும்

(தொழில், விஞ்ஞான, நவீன) பொலிவு நிற்கின்றது. அத்துடன் முக்கியமாக மனிதன் தன் வாழ்வில் உயர்ந்த விழுமியங்களை கடைப்பிடித்து மனித வாழ்வையும், பிறவுயிர்கள் வாழ்வையும் உலகவாழ்வையும் உயர்வடையச் செய்து சுதந்திரம் அடையச் செய்யும் பண்பு சைவ சமயத்திற்கேயுண்டு. அதனால்த்தான் மனிதன் இவ்வுலகில் வாழ்வதற்காக மட்டுமன்றி மோட்சம் என்கின்ற சுதந்திரத்திற்கும் வழிகாட்டி நிற்கின்றது. அவ்வழிகாட்டலே மனிதப்பண்பாக எங்கும் வியாபித்து நிற்கின்றது. ஆகவே சைவ சமயத்தின் தோற்றத்தையும், இன்றைய நிலையையும் அறிந்துப் பார்க்கலாம்.

சமயம் சரித்திரம், வரலாறு, என்பன மனிதனில் இருந்து ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவை. ஆகவே மனிதனுடைய தோற்றம், வாழ்வு (இருப்பு), சங்கமம் என்பவற்றை வரலாறாகவும், சரித்திரமாகவும் பகுப்பாய்வு செய்யும் போதுதான் சமயம் பற்றிய உண்மையை அறிந்து உணர முடியும். பிரபஞ்சத்தில் இருந்து தோன்றிய மனிதன் ஆரம்பத்தில் பிரபஞ்சத்தின் பஞ்சவடிவங்களான (பஞ்ச பொருளான) இயற்கையைச் சமயமாக கருதினான். இயற்கைத்தாயுக்கு அடுத்தபடியாக தன்னை ஈன்றெடுத்த தாயைச் சமயமாக கொண்டான். ஏன்னெனில் தாயே மனிதனுக்கு வேண்டிய அனுபவத்தையும், அறிவையும் அளிக்கவடியாக ஆரம்பித்து வைத்தாள். இவ் அளிக்கவடியான அனுபவ அறிவே இன்றைய சமயமாகவும் (ஆரம்பத்தில் சமயமாகவும்) இன்றைய விஞ்ஞானமாகவும் விளங்கிறது. பண்டைய வரலாற்று சரித்திர சிறப்பு வாய்ந்த "பபிலோனியா" "மொசப்பத்தோமியா" "மெக்சிக்கோ" "ஹரப்பா" நாகரிகங்களும், இற்றைக்கு 8000 வருடங்கள் முன்னாம் பிரசித்தி பெற்ற 'ஏலம்' [தற்போதைய ஈரான் நாட்டில் உள்ள தென் பகுதி. 44 ஆயிரம் சதுரமைல் அளவைக் கொண்ட பகுதியும், 'ஏலு' என்கின்ற மொழியை பேசியவர்களும்], இந்து மதத்தின் முது பெரும்பான இதிகாசங்களாக விளங்கும் இராமாயணம், மகாபாரதம் என்ற புராண சரித்திர காலத்திற்கு

padippakam

முன்னர் 'ஈழம்' என இன்று தனித்து வந்துடனும், சுதந்திரத்திரத்தி ரத்துடனும் விளங்கிய நாட்டிலும் பெண்களையே [இராவணனின் மனைவியார் மண்டோதரி தேவி] தெய்வமாக வணங்கி வந்தார். சமயம் என்று பார்த்தாலும் சரி அன்றி சைவ சமயம் எனக்கொண்டாலும் சரி இதன் முதலில் அன்றி ஆதியில் அன்றி தொன்மையான சமயம் தோன்றிய இடம் 'ஈழம்" அச்சமயம் சைவசமயம்" என்பதை அறிந்திட்டு தெளிவாக கூறமுடியும். தாய்வழிச் சமுதாயமே அதிமனிதனை உருவாக்கியது.

பூமி ஆரம்பத்தில் தென்துருவம் என்றழைக்கப்படும் குமரிக்கண்டம் - CONDAYANA [தென்துருவத்துடன் இணைந்த அவுஸ்திரேலியா, இந்தியா, அரபு (மத்திய-கிழக்கு) ஆபிரிக்கா, தென்னமரிக்கா, என்பவற்றுக்கிடையில் அமைந்த மடகஸ்கார் - ஈழம்] எனவும், வடதுருவம் என்று ஈரோசியா [ஆசியா, ஐரோப்பா, வட அமரிக்கா] இருந்தன. இதில் ஈழம் பிறிகாம்பேரியன் காலத்திற் தோன்றிய ஒன்றாகும். பூமியில் ஏற்பட்ட புறத் தாக்கங்களால் குமரிக்கண்டம் தென்னமரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்த்திரேலியா, இந்தியாவும் - மத்திய கிழக்கும் இணைந்த பகுதியாகவும், இலங்கை, மடகஸ்கார் என்பன தனித்தீவுகளாகவும் முதலில் பிரிந்தன. அடுத்து வந்த காலங்களில் இந்தியாவும் அரபும் ஆசியாவுடன் இணைந்தன [இவ்விளைவு 15 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டதாயும் இதன்போது இமயமலை, சகாரா பாலைவனம் தோன்றியதாகவும், இக்காலத்தில் ஆசியாவின் பிரதான பகுதியில் உயிரினங்கள் இருக்கவில்லை என அறியப்படுகிறது. அத்துடன் இணைவுக்கு முன்னர் இந்த நிலத் தொகுதியான இந்தியா, அரபு, இலங்கை, மடகஸ்கார் என்பன லெமூரியாக் கண்டம் எனப் பெயர் கொண்டது.] 'ஈழம்" ஆதிகாலம் தொட்டே இருந்து வந்தது. குமரிக்கண்டம், லெமூரியாக் கண்டம் என்ற கோட்பாடுகளைக் காட்டி இனிமேலும் ஈழத்தை சேயாகவும், இந்தியாவை தாயாகவும் இருப்பிப்பதை நிறுத்த வேண்டும். அப்படியானால் அவுஸ்த்திரேலியா, ஆபிரிக்கா, போன்ற நாடுகளும் எம்மை அழைக்கவுரிமை (உறவு) உண்டு.



படிப்பகம்

padippakam

நடைமுறை வரலாற்று மனித உயிர்களின் உடலாக்க இயல் பரிணாம வளர்ச்சி ஆதிமனிதன், மடகஸ்கார் இலங்கை பகுதிகளில் இப்பவும் வாழ்ந்து வரும் லமூர் (LEMURS) மிருகத்தின் மரபான உயிரினத் தொகுதியே. மனித இனத்தின் வரலாறுகளை MOLECUR, Deoxyribo Neucleic Acid (D.N.A) மூலம் பகுப்பாய்வு செய்தபோது ஆதிமனிதன் இப்பகுதியில் இருந்து தோற்றம் பெற்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே ஆதிமனிதன்தான் சமயத்தை, கலை நாகரிகத்தை, விஞ்ஞானத்தை உருவாக்கியிருக்க வேண்டும். ஏனைய வரலாறுகள், சரித்திரங்கள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது ஈழம், ஈழவர்களை முன்மாதிரியாகவும், முன்னோடியவர்களாகவும் விளங்கி வந்துள்ளனர். இதுகாறும் உலகையும், உயிரியல் என்கின்ற வரலாற்று ரீதியாக கண்டோம். இத்து சரித்திர ரீதியாக காண்போம்.

ஆரம்பத்தில் ஒலி சக்தியே உயிரினங்களின் தோற்றுவாய் எனக் கண்டோம். மனிதன் என்கின்ற தோற்றத்திற்கு உரிய ஒலிச்சக்தி அவனிடம் காணப்படும் மொழியே. ஆதிமனிதன், ஆதிசமயம் என்பன ஈழவர்களானதால் ஈழவர் பேசிய ஆதி மொழியே மனித மொழியாக இருந்திருக்க வேண்டும். ஈழவர்களின் ஆதிமொழி 'எலு" Elu என்கின்றது. எலு என்பது காலப் போக்கில் 'ஈழு" என மாற்றமடைந்து. மக்கள் எந்த மொழியை பேசுகின்றார்களோ அம்மொழியின் பெயரே அந்நாட்டுக்கும் வழங்கப்படுகிறது. ஈழு மொழியை பேசும் நாடு ஈழநாடு என அழைக்கப் பெற்றது. ஈழு மொழி, ஈழநாடு ஆகியவற்றை ஆட்சி செய்கின்ற அரசன் [ஈழம் + கோன் : ஈழங்கோன் ஆகி] இலங்கோனாகியது. ஈழ நாட்டை ஆண்ட அரசர்கள் பாரம்பரியம் பெற்றிருந்ததால் அரசனை அழைக்கும் பெயரையே நாட்டுக்கும் சூட்டினர். இதன் காரணமாக இலங்கோனின் நாடு என்பது இலங்கை என பெயர் பெறலாயிற்று. [சேரன், பாண்டியன், சோழன், நாகதீபம் போன்று] இதேபோல் இலங்கை ஆண்ட அரசன் என்பதால் இலங்கேஸ்வரன் என்ற பெயர் இராவணனுக்கென்று.]



படிப்பகம்

padippakam

மொழி வளம் பெற்றிருந்ததால்தான் இலங்கேஸ்வரனால் சங்கீதத்தில் சாமகானம் என்றொரு இலக்கணத்தை உருவாக்கி, இசையால் இறைவனை (உயிர் அணுக்களை-உடன்) சங்கமமாகி இறைவனுக்கு இணையான ஈஸ்வர பட்டத்தைப் பெற்றவர். இதனால் கலைக்கு உயிர் கொடுத்த காவலர் என்றும், உயிர்களின் தோற்றுவாயுக்கு இசை (ஒலி) தொடர்பான வீணைக் கொடியையுடைய வீணைக் கொடியோன் எனவும் பாராட்டப் பெற்றான்.

ஈழவர்கள் நாகரிகமாகவும், சீரும், சிறப்பாக இருந்ததைக் வட நாட்டில் இருந்து நாடோடியாக வந்த வால்மீகி கண்டு அதிசயமும் ஆச்சரியமும் கொண்டார். இதனால் தமது நாடோடி வாழ்க்கையை துறந்து ஈழத்தில் தங்கியிருந்தார். அப்போது அவர் இராவணனின் [இராவணன் என்பது சமஸ்கிருதத்தில் இறைவன் என பொருள்படும்] சித்தப்பாவான அகஸ்த்தியர் மூலம் 'ஏடு' மொழியையும் கற்று, இசையையும் கற்றுக் கொண்டு வடநாட்டுக்கு சென்றார். செல்லும் போது அகத்தியரின் துணையுடன் சங்கீத பொக்கிஷங்களையும் கொண்டு சென்றார். இதன் காரணமாக அகஸ்த்தியருக்கும்- இராவணனுக்கும் மனத்தாபம் ஏற்பட்டது. வால்மீகி எடுத்து சென்றது இசையை மட்டுமல்ல சைவசமய சித்தாந்தத்தை எடுத்துச் சென்றார். நாடு திரும்பிய வால்மீகி இசையையும் - ஏடு மொழியையும் பாலி மொழியுடன் மாற்றம் செய்ய ஏற்பட்டதே சமஸ்கிருதம் பிறந்தது.

கிறிஸ்த்துவுக்கு முன்னர் 1200 வருடங்களில் வடமேற்கிலிருந்து வந்து சிந்து வெளிப் பள்ளத்தாக்கில் குடியேறிய ஆரியர்கள் (நாடோடியா) நிரந்தரமாக குடியிட்டனர் அப்போ அங்கு ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி நாட்டை கைப்பற்றினர். இவ் ஆரியர்கள் பெரும்பாலும் ஜேர்மன் மொழி பேசுபவர்களாகவும். ஈரான், ஆப்கான் மலைப்பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். இவர்களின் ஆக்கிரமிப்பு, அதிக்க போக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காக கி.மு. 500 ஆண்டளவில் "மாவீரனால்" ஜைனமதமும், கௌதம



படிப்பகம்

padippakam

புத்தரினால் பௌத்த மதமும் உருப்பெற்றது. ஆனால் இந்துயின மதம் அமைதியை தமது தத்துவமாக கொண்டிருந்ததால் ஆரியர்களால் அழித்தொழிக்கப்பட்டது. இதையுணர்ந்த புத்தர் நேபாளியா, தென்கிழக்காசியா - சீனா ஆகிய பகுதிகளுக்குப் பரப்பினார். இதற்காக நல்லாட்சியும் - பலம் பொருந்திய ஆட்சியும் இடம் பெற்ற சைவ சமய அரசனான இலங்கேஸ்வரனிடமே அபயம் அளித்தனர். புத்தர் இலங்கைக்கு மட்டும் 3 தடவைகள் யாத்திரையை மேற்கொண்டுள்ளார்.

இதனைப் பொறுக்கமுடியாத ஆரியர்கள் எல்லா வாறும் நிறைந்த இலங்கேஸ்வரனையும், ஈழவர்களையும் யக்கர்கள் என்று (யக்கர் என்றால் வெள்ளைத் தோலுக்கு எதிரானவர்கள், ஆரியரின் எதிரிகள்) அபாண்டமான பழியைச் சுமத்தி (பயங்கரவாதிகள்) படை எடுத்து அனைத்தையும் அழித்து கைப்பற்றினார். இதனைத் தொடர்ந்து ஈழ மொழியையும், சைவ சமயத்தையும் இல்லாமல் செய்வதற்காகவும், ஆரியருக்கென சைவ சித்தாந்தங்களை எடுத்து வேதங்களாகவும், இதிகாசங்களாகவும் (புராணங்களைத் தொகுத்து) 'இந்து' 'மதமாகவும்', பாளி மொழியை ஆரிய மொழியுடன் இணைத்து சமஸ்கிருதம் பாளி என்பது பாளி+ஈழு ஆகும். பின்னர் ஈழு+பாளி+சமஸ்கிருதம் என்பவற்றை இணைத்து ஒரு உயர்வான கட்டமைப்பை (SUPERSTRUCTURE) உடைய தமிழ் மொழியாக உருவாக்கி நவீன முறையில் ஆதிக்கம் செலுத்தினர். இதன் பிரதிபலிப்பாகத்தான் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோர் உருவானது. இதையடுத்து பிள்ளையார், முருகன், விஷ்ணு போன்ற ஆரியக் கடவுள்களும், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளும் உருவாகின. தமிழ் மொழி ஆரிய மொழி என்பதால்தான், வால்மீகி புகழ்ந்து பாடிய இலங்கேஸ்வரனை (பாளியில்) தமிழ் மொழிப் புலவர் கம்பன் (வம்பன்) இராட்சதனாகவும், காமுகனாகவும், அயோக்கியனாகவும் சித்தரித்துள்ளான். தமிழ் மொழிதான் திராவிட மொழியின் தொன்மை என்பது மறுபரிசீலனைக்கு உட்படுத்தப் பட வேண்டும்.

Race and population:

Modern Human population - All living human population



படிப்பகம்

padippakam

belong to single biological species (Homo sapiens) with in large group of genes (Homo). within the human speices a large number of population may be differentialed genetically through ready abservable characteristics and through lie obvious but more distinctive biological, Traits, such as blood Typs. There biological Groupings with in Speices are commanly called races, in Humans as well as in other living forms.

The terms Race as applied to humans has been veriously used by Politician, millitory leanders, Philogist human biologist, demographers, and historians some races consisted Language Groups. offter of peoples whose only kinship is that They speak a common language. Suchwas the orignal meanig of So-called Aryan Race. Some Races are simply hypothelical invented To embrace Present distrubion of such genetic.

மேற்கை நாடுகள் தமது பாரம்பரியத்தை கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களுடன், அவற்றின் பண்டைய நாகரீகத்துடனும் ஒப்பிடுகின்றன. ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, ஸ்பெயின், போன்ற மொழிகள் ஒன்று பகுக்கத்தில் இலத்தீன் மொழியில் இருந்து பிரிந்து வந்த மொழிகள். (தற்சமயம் இந்தோ ஐரோப்பிய மொழி என கூறுகின்றனர்) அத்துடன் அவர்களது நாகரிகமும் கிழக்கு தேசமான எகிப்து, கிரேக்கம், ரோமம் போன்ற இடங்களில் இருந்து வந்ததாக கூறுகின்றன. இதே போன்று ஆசிய மொழிகளான தமிழ், சிங்களம், பாலி, சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற பிராந்திய மொழிகளின் பிறப்பான தோற்றுவாயும் ஒன்று பகுக்கத்தில் ஈலோத்'ராய' மொழியாகும். பண்டைய நாகரிகமானதுள் மொழியாகிய ஏலாம் ட (Elam State), மெசந்தரா, சுரா, மற்றும் மத்திய கிழக்காசிய மொழிகள், பப்பாளி மொழி அடங்கும், அஸ்ஸிரேலியா, அரபு



படிப்பகம்

padippakam

ஆரியக்க மொழிகளிலும் அடிப்படையாக கலந்துள்ளது.

அக்காலத்திலும், எக்காலத்திலும் வரலாற்றுச் சிறப்பும் சரித்திர புகழும் கொண்டு விளங்கும் சைவ சமயத்தை இந்து மதம் என்கின்ற வெறியாளர்களாகவும், அறிஞர்களாகவும், சான்றோர்களாகவும், மெய்ஞானிகளை, விளங்கியவர்களை மதவெறியர்களாகவும் மாற்ற நினைப்பது மாபெரும் தவறு. சைவம், சைவர், சமயம் என்பது சகல மனிதர்களையும், சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் சமாதானத்துடன் ஏற்றுக்கொள்வதாகும். மதம் என்பது இனப்பெருக்க காலத்தில் யானை வெறிபிடித்து வருவதை அழைப்பது "மதம்" ஆகும், அன்றி இனப்பெருக்கம் வேண்டி மனித வள(ன)ம் பெருவதாக அழைக்கும் இனம் 'மதம்' எனப்படும்.

ஈழத்தின் பூர்வீகம் புதைந்து போகாமலும், தனித்துவம் தரம் கெடாமலும், சுதந்திரம் சுருண்டு போகாமலும், வரலாற்று மகிமை மங்கிப் போகாமலும், சரித்திர சிறப்பு சீரழிந்து போகாமலும் இருப்பதற்காக இன்னுயிர் ஈந்த அனைத்து மக்களுக்கும், மாவீரர்களுக்கும் (தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - பெயர் மாற்றம் செய்ய வேண்டும், ஏனெனில் தமிழ் ஆரிய மொழி, புலிக்கொடி ஆரியருடைய கொடி, மனிதத் தன்மையில் இருந்து மிருகத்தன்மைக்கு பின்னோக்கிச் செல்வது) மகாபுருசர்கள் (தாய்மண் காப்பாற்றுவதற்காக போராடிய வெளத்த மக்கள் - சிங்களம் என்பது ஆரியமொழி புத்தர் பெருமான் நாகர் இனத்தை சேர்ந்தவர், சிங்கக் கொடி ஆரியக்கொடி) மற்றும் மாண்புமிகு முஸ்லீம்களுக்கும், வேதம் பயிலும் கிறிஸ்த்தவர்களுக்கும் சமர்ப்பணமாக இதனை சமர்ப்பிக்கின்றோம்.

ஆகவே இலங்கையில் வாழும் பௌத்தர்களானாலும், சைவர்களானாலும், முஸ்லீம்களானாலும், கிறிஸ்த்தவர்களானாலும் சரி எக்காலத்திலும் அதிக்க, அக்கிரமிப்பு மிக்க மதவெறியை மறந்து மனிதத்தை மகிமையடையச் செய்து தமது பாரம்பரியத்தையும், பூர்வீகத்தையும், வரலாற்றையும் நிலைபெறச் செய்து உலகளாவ உயர்ந்து உதய சூரியனின்



படிப்பகம்

ஊடுருக்கும் "கதிர்" போல் எங்கும் வியாபித்து இடியமைய நடத்த வேண்டும்.

வரலாற்று தொன்மை மிக்க அநுராதபுர, பொலநறுவ, யாழ்ப்பாண தொல்லியற் களஞ்சியங்களான கற்காலத்தில் பாவிக்கப்பட்ட சிறு ஆயுதங்கள், சிலைகள், வெண்கலச் சிலைகள், எலும்பு, கொம்பு போன்றவற்றால் ஆன பொருட்கள், மண் காலத்தில் பாவிக்கப்பட்ட பாத்திரங்கள், மரத்தாலான சிலைகள். கிறிஸ்துவுக்கு முன்னர் 5000 ஆண்டு காலத்தில் புழக்கத்தில் இருந்ததாக இலங்கையில் உள்ள இவைகப் படிவங்களின் ஆராய்ச்சிப் பெறுபேறு பதிவு செய்துள்ளது. இதனையும் சகிக்கக் கொள்ள முடியாத ஆரியனிடம் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலச் சிலை அனுமானுடையது என்றும், அனுமான் தலைக்கு மேலே 5 தலை நாகம் இருப்பதாகவும், இதனால் நாகதீபத்திற்கும் - நாகபட்டினத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும் அண்மையில் புளுகை ஆரியன் பத்திரிகையான 'வீரகேசரி' வாரச்சேகரிப்பு (18.07.93) பிரசுரித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிடுவதாவது இதே போன்ற அனுமன் சிலை ஆந்திரப் பிரதேசத்தில் இருப்பதாகவும் எழுதியுள்ளது.

ஈழத்தில் உள்ள நாகர்களுக்கும், இந்தியாவின் ஒரிசாவில் உள்ள நாகர்களுக்கும் இம்மியளவும் தொடர்பு இல்லை என்பது உடலியல் ஆய்வாளர்களின் கருத்து, காரணம் ஒரிசாவில் உள்ள நாகர்கள் மொங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் ஈழத்தில் உள்ள நாகர்கள் ஆரிய ஊடுருவலுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல, அவர்களின் உடலமைப்பு அவுஸ்திரேலிய ஆதிவாசிகளுடன் அல்லது வேடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்து அனுமன் குரங்கு, அதனால் குரங்கிற்கும் காரண பாம்பிற்குமே ஒத்து வராது. எந்த ஒரு குழந்தையை கேட்டாலே கூறும் குரங்கு பிடி என்றால் என்ன என்பதை. ஐந்து தலை நாகம் படம் எடுக்க வீற்றிருப்பது நாகராசனே. அது மட்டுமல்ல இலங்கையில் வாழ்ந்த நாகர்கள் நினைத்த உருவத்தை எடுக்கக் கூடிய ஆற்றல், சக்தி படைத்தவர்கள் என்பதை சீன, அரபு மாலுமிகள் தமது பயணக் கதைகளில்

குறிப்பிட்டுள்ளனர், ஆனால் ஆரியர் தமது ஆதிக்கத்தை தெற்கே பரப்புவதற்காக ஈரானில் இருந்து கொண்டுவந்து குடியேற்றப் பட்ட நாகர்கள்தான் (பிராமணர்கள்) நாகப்பட்டினத்திலும், திருவாரூர் புரத்திலும் வாழ்ந்தவர்கள்தான் ஆரியர்கள். ஆரியசக்கரவர்த்திக ளான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் படையெடுத்து வந்தபோது இவர்கள் கொண்டுவரப்பட்டனர். ஆகவே கலை, மதம் எனவும் ஆதிக்கம், ஆக்கிரமிப்பு செலுத்துவதை இனிமேலும் அனுமதிக்கமுடி யாது.

சைவர்களால் "மேருமலை" எனவும், பௌத்தர்களால் நிலவு கொண்ட இடம், ஆதிமனிதன் ஆதாம் ஏவாள் பூமிக்கு வந்திறங் கிய இடம் ஆகிய சிவனொளி பாதமலையும். வேதங்களில் திகோல்ட் மாநதி மனித உதயம் பெற்ற தலம் எனவும், சிங்களர்களாக வெடுர் மிகும் (கிளி) மனிதனாக பெற்ற புனித தலமாக வி ளங்கிய "சீமலை" என்கின்ற புனித தன்மை பெற்ற எமது பூமி யையும், மக்களையும் விடுதலை பெறச் செய்து, சுதந்திரமடையச் செய்வோம்.


கல்லிலிருந்து - மண்ணாகி பின்னர் மனிதனாகினான் என்பின் ற வரலாறு பாரம்பரியமாகிய சைவ (சிந்தனை) இலக்கணத் திற்கு அமைய தமது பூர்வீக வரலாற்றை கல், மண், மரம் ஆகிய நிலைகளில் சிலை (கடவுளாக) செய்து வழிபாடு நடாத்தி வந்தான். ஆனால் கொம்பியூட்டர் யுகத்திற்கு பின்னர்---- "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய என்பதுடன் கம்பியூட்டர் காலத்திற்கு முன் தோன்றி மூத்த குடியாகும்" மிருக நிலையில் இருந்து மனிதனாக பரிணாமம் பெறும் போது பக்க விளைவு மதவெறியாவாகும். அதனால் மதவெறி யானை மனித இனம் இருக்கும்வரை ஒழிக்க முடியாது. சைவர்களான ஈழவர்கள் மாற்று சமயங்களை ஏற்றுக்கொண்டு. பௌத்த மதம் - கி.மு. 3ம் நூற்றாண்டில், இஸ்லாம் மதம் கி.பி 1344ம் ஆண்டு, கிறித்தவ மதம் கி.பி. 1544. இஸ்லாம் மதம் ஆரியர்களால் ஆக்கப் பட்டது நல்லூர் கோவில் கட்டுவதற்காக கி.பி. 1662 ஆண்டளவில் [நல்லூர் ஆதீனத்தில் வடக்கே இஸ்லாமியர் மையம் இருப்பதும் இருக்கின்றது]. **"கதிர்"**


திகதி - 23/7/93 - பிரான்சு.

padippakam

# 'பண்டைய மொழி'

[குறியீட்டு முறையில் உள்ள மொழி]





படிப்பகம்

padippakam



லெமூர் உயிரினத் தொகுதி மனிதன்

படிப்பகம்